2019 பிப்ரவரி 13]

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பது முதல் ஐம்பத்து ஆறு வரையிலான 17 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு பேருவகையோடு அளிக்கிறேன்.

(ஈ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு கொறடா திரு. சு. ராஜேந்திரன், மனுக்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்குவதாக விதி 110-ன்கீழ் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, எனது அரியலூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்று முதல் ஆறு வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(உ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12-05

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி, உழவர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு, விவசாயிகள் மற்றும் அனைவருக்கும் பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வழங்கியும், இந்தியாவே வியக்கின்ற அளவிற்கு தொழில் முதலீட்டாளர்கள் மாநாடுமூலம் புதிய ஒப்பந்தங்களை உருவாக்கி, 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்தும், பேரவை விதி 110-ன்கீழ், தமிழக வரலாற்றில் முதன்முறையாக